மே 25-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 22 May 2012 03:15:06 PM IST

நாமக்கல், மே 21: நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற வெள்ளிக்கிழமை ( மே 25 ) மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் ஜெ.குமரகுருபரன் தலைமையில், ஆட்சியரக அலுவலக கூட்ட அரங்கில் நடக்கும் இந்தக் கூட்டத்தில், நாமக்கல் மாவட்ட விவசாயிகள் பங்கேற்று தங்கள் குறைகளை நேரடியாகவோ அல்லது மனுக்களாகவோ தெரிவித்து பயன்பெறலாம் என்று ஆட்சியர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சர்க்கரை ஏற்றுமதி 13.51 லட்சம் டன்

மே 23,2012,00:21



புதுடில்லி:நடப்பு சந்தை பருவத்தின் (அக்டோபர்-செப்டம்பர்), முதல் ஆறு மாத காலத்தில், நாட்டின் சர்க்கரை ஏற்றுமதி, 13.51 லட்சம் டன்னை எட்டியுள்ளது. இது, இதற்கு முந்தைய பருவத்தின், இதே காலத்தில், 28.14 லட்சம் டன்னாக இருந்தது என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.உலகில், சர்க்கரை உற்பத்தியில், முதல் இடத்தில், பிரேசிலும், இரண்டாவது இடத்தில், இந்தியாவும் உள்ளன. சர்வதேச அளவில், சர்க்கரை பயன்பாட்டிலும், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. நடப்பு பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.
இது, இதற்கு முந்தைய பருவத்தில், 2.43 கோடி டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.உள்நாட்டில், சர்க்கரை தேவைப்பாடு, 2.20 கோடி டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. தேவையை விட, உற்பத்தி அதிகரித்துள்ளதால், மத்திய அரசு, இரண்டு கட்டங்களாக, 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியது.இந்நிலையில், அரசு, சென்ற 2ம் தேதி, சர்க்கரை ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்கியது. இதையடுத்து, வரும் மாதங்களில், இதன் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## மலிவு விலை இறக்குமதியால் உள்நாட்டு பாக்கு தொழில் பாதிப்பு

மே 23,2012,00:20



கொச்சி:குறைந்த விலையில் கொட்டை பாக்கு இறக்குமதி செய்யப்படுவதால், உள்நாட்டில் இத்தொழில் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு, ஒரு கிலோ கொட்டைப் பாக்கின் குறைந்தபட்ச இறக்குமதி விலையை, 35 ரூபாயாக நிர்ணயித்துள்ளது.
இந்தோனேஷியா:ஆனால், சென்ற 2011-12ம் நிதியாண்டில், இந்தோனேஷியாவில் இருந்து ஒரு கிலோ கொட்டைப்பாக்கு, சராசரியாக 22.34 ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதே சமயம், இதே காலத்தில் மங்களூர் மற்றும் கொச்சியில் ஒரு கிலோ பாக்கு, முறையே 77.77 ரூபாய் மற்றும் 68.46 ரூபாய்க்கு விற்பனையானது.
அதாவது, இறக்குமதி விலையை விட, 40 - 55 ரூபாய் கூடுதலாக பாக்கு விற்பனையாகியுள்ளது.உள்நாட்டில் போதிய அளவிற்கு பாக்கு உற்பத்தி உள்ளது. என@வ பாக்குகளை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை என, விவŒõயிகள்

வலியுறுத்தியுள்ளனர்.

இறக்குமதி:இந்தியா, கடந்த 2008-09ம் நிதியாண்டு, 110 கோடி ரூபாய் மதிப்பிலான 44 ஆயிரத்து 776 டன் பாக்கு வகைகளை இறக்குமதி செய்துள்ளது. இது, 2009-10ம் நிதியாண்டில் 41 ஆயிரத்து 806 டன் (102 கோடியே 41 லட்சம் ரூபாய்) என்ற அளவிற்கு இருந்தது.

கடந்த 2010-11ம் நிதியாண்டில், உள்நாட்டில் 5 லட்சத்து 14 ஆயிரம் டன் கொட்டை பாக்கு உற்பத்தி செய்யப்பட்டது. இவற்றின் சராசரி விலை 34 ரூபாய் ஆகும்.

இதே நிதியாண்டில், வங்கதேசத்தில் இருந்து 33 ஆயிரத்து 238 டன் (116 கோடியே 53 லட்ச ரூபாய்) கொட்டை பாக்கு இறக்குமதியானது. இதன் சராசரி விலை ஒரு கிலோ 35 ரூபாயாக இருந்தது.

அதே சமயம், இதே காலத்தில், இந்தோனேஷியாவில் இருந்து, 52 கோடி ரூபாய் மதிப்பிற்கு 23 ஆயிரத்து 293 டன் கொட்டைப் பாக்கு இறக்குமதி செய்யப்பட்டது. இதன் சராசரி விலை, கிலோவிற்கு 22.34 ரூபாயாக இருந்தது.தாய்லாந்தில் இருந்து 1,226 டன் (3 லட்சத்து 12 ஆயிரம் கோடி ரூபாய்) கொட்டைப் பாக்கு, சராசரியாக கிலோ 25.48 ரூபாய் என்ற விலையில் இறக்குமதி செய்து கொள்ளப்பட்டது.

ஆக, கடந்த 2010-11ம் நிதியாண்டில், பல்வேறு நாடுகளில் இருந்து மொத்தம் 259 கோடி ரூபாய் மதிப்பிலான, 76 ஆயிரத்து 41 டன் (259 கோடி ரூபாய்) கொட்டை பாக்கு, இறக்குமதியானது. இதன் சராசரி விலை, கிலோ 34 ரூபாயாகும்.உள்நாட்டு உற்பத்தி:இதே நிதியாண்டில், உள்நாட்டில் கொட்டை பாக்கு உற்பத்தி, 5 லட்சத்து 14 ஆயிரம் டன்னாக இருந்தது. இதன் சராசரி விலை, மங்களூர் சந்தையில் 77.77 ரூபாயாகவும், கோழிக்கோட்டில் 68.46 ரூபாயாகவும் இருந்தது.உள்நாட்டில் பாக்கு உற்பத்தி நன்கு உள்ள நிலையில், மலிவு விலையில் இதனை இறக்குமதிöŒ#வதால் அது விவசாயிகளை கடுமையாக பாதிக்கும்.

## வரத்து அதிகரித்துள்ள போதிலும் ஏலக்காய் விலை தொடர்ந்து உயர்வு

மே 23,2012,00:16



கொச்சி:தமிழகம் மற்றும் கேரள ஏல மையங்களில், ஏலக்காய் வரத்து அதிகரித்துள்ள போதிலும், அதன் விலை குறையாமல் உயர்ந்தே காணப்படுகிறது.
கடந்த வாரம் ஏல மையங்களுக்கு கொண்டு வரப்பட்ட, 472 டன் ஏலக்காயில், 455 டன் விற்பனை செய்யப்பட்டது. அந்த வாரம் முழுவதும், ஒரு கிலோ ஏலக்காய் 800 ரூபாய் முதல் 890 ரூபாய் வரை விலைபோனது. உயர்தர ஏலக்காய், கிலோ 1,129 ரூபாய் முதல் 1,381 ரூபாய் என்ற அளவில் அதிகரித்து ஏலம் போனது.
ஏலக்காய் வரத்து:பருவ நிலை மாற்றத்தால், வரும் மாதங்களில், புதிய ஏலக்காய் வரத்து குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் வர்த்தகர்கள், தரமான ஏலக்காய் வகைகளை வாங்கி வருகின்றனர்.அடுத்து, வரும் ஆகஸ்ட் இறுதியில்தான் புதிய ஏலக்காய் வரத்து இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.ரம்ஜான் பண்டிகையையொட்டி ஏலக்காய் வகைகளை, ஏற்றுமதியாளர்கள் அதிக அளவில் வாங்குவர் என்று எதிர்பார்க்கப்பட்டது.
ஆனால்,ஏலக்காய் விலை உயர்வு காரணமாக, ஏற்றுமதியாளர்கள் ஏலக்காய் வாங்குவதை நிறுத்தி வைத்துள்ளனர். அவர்கள், ஜூன் மாதம் மத்தியில் இருந்து ஏலக்காய் வாங்குவதில் ஈடுபடுவார்கள் என தெரிகிறது.ஏல மையம்:கொச்சி ஏல மையத்தில், சென்ற ஆண்டு ஆகஸ்ட் 1ம் தேதி முதல் நடப்பு மே மாதம் 20ம் தேதி வரை 17 ஆயிரத்து 805 டன் ஏலக்காய் வந்துள்ளது. இதில், 16 ஆயிரத்து 186 டன் விற்பனையாகியுள்ளது. முந்தைய ஆண்டு இதே காலத்தில், ஏலக்காய் வரத்து 9,975 டன்னாகவும், விற்பனை 9,721 டன்னாகவும் இருந்தது.

## வறட்சிக் காலங்களில் தீவன பராமரிப்பு

பதிவு செய்த நாள் : மே 23,2012,00:00 IST

வறட்சிக் காலங்களில் தீவன பராமரிப்புதீவனப்பற்றாக்குறை ஏற்படும் வறட்சிக்காலங்களில் கால்நடைகளுக்கு உடைத்த இருங்குச்சோளம், கேழ்வரகு, கம்பு, சாமை, கோதுமை, கொள்ளு ஆகியவற்றை மக்காச்சோளத்திற்கு பதிலாக 50% வரை தீவனத்தில் அளிக்கலாம். அரிசித்தவிடு, கோதுமைத்தவிடு, அரிசிக்குருணை, உளுந்து, பயறு, கடலைபொட்டு போன்றவற்றை கால்நடை தீவனத்தில் 50% வரை சேர்க்கலாம். விலை மலிவாக கிடைக்கும் தானிய உப பொருட்களை தீவனத்தில் கலப்பதால் தீவனச்செலவு மிச்சமாவதுடன் சத்துள்ள ஆகாரம் கிடைக்கிறது.
கிழங்கு, திப்பி, பருத்திக்கொட்டை, ஓடு நீக்கப்பட்ட புளியங்கொட்டை ஆகியவற்றை உடைத்து தீவனத்தில் சேர்க்கலாம். அறுவடைக்குப் பின் கிடைக்கும் வைக்கோல், சோளத்தட்டை,கம்புத்தட்டை, வேர்க்கடலைக்கொடி, காய்ந்த புல், சூரியகாந்தி செடி, மக்காச்சோளத்தட்டை, கேழ்வரகுத்தட்டை ஆகியவற்றை தீவனமாக கொடுக்கலாம்.

சத்துக்குறைந்த இந்த உலர் தீவனங்களை 4% யூரியா கரைசல் தெளித்து சிலநாட்கள் காற்றுப் புகாமல் பாதுகாத்து வைப்பதன் மூலம் சத்துள்ள கூளத்தீவனம் கால்நடைகளுக்கு கிடைக்கும். யூரியா கொண்டு ஊட்டமேற்றிய தீவனத்தை ஆறு மாத வயதைக் கடந்த மாட்டிற்கு 4-5 கிலோ வரை அளிக்கலாம்.

ஆடுகளுக்கு சோளத்தட்டையுடன் காய்ந்த உளுந்துச்செடி, துவரைச்செடி, நிலக்கடலைக்கொடி, சவுண்டல், கிளிரிசிடியா, மர இலைகள், கொடுக்காபுளி, கருவேல் ஆகியவை நல்ல உணவாகிறது. காய்ந்த பயறுவகை தீவனம் சாலச்சிறந்தது. கரும்புச்சோகை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. கால்நடைகளுக்கு தினசரி 20-25 கிலோ வரை அளிக்கலாம். கரும்புச்சோகையை சைலேஜ் முறையில் பதப்படுத்தி தீவனப்பற்றாக்குறையை போக்கலாம். சூரியகாந்தி செடி, விதை நீக்கிய சூரியகாந்திப்பூ ஆகியவற்றை சிறு துண்டுகளாக வெட்டி கால்நடைகளுக்கு உணவாக வைக்கலாம். கருவேல், வேலிக்கருவேல், சவுண்டல் விதைகள், புளியங்கொட்டை, மாங்கொட்டை ஆகியவற்றை தீவனமாகப் பயன்படுத்தலாம். விதைகளை 20-30% வரை தீவனத்தில் சேர்க்கலாம்.

மர இலைகள் சத்துள்ள தீவனமாக அமைந்துள்ளது. அகத்தி, சவுண்டல், கிளிரிசிடியா, கொடுக்காபுளி, வாகை ஆகியவற்றின் இலைகளில் புரதச்சத்து அதிகமாக உள்ளது. அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் விஷ சத்து அற்ற, கால்நடைகள் விரும்பி உண்ணும் மர இலைகளை கோடை காலத்தில் அளித்து தீவனப் பற்றாக்குறையை போக்கலாம். மர இலைகளில் புரதச்சத்து அதிகமாகவும், எரிசக்தி குறைவாகவும் உள்ளதால், மர இலைகளை முழு தீவனமாக கால்நடைகளுக்கு அளிக்கக்கூடாது. எனவே மர இலைகளுடன் வைக்கோல், சோளத்தட்டை, கம்பந்தட்டை, கேழ்வரகு தட்டை போன்றவற்றையும், கோதுமைத்தவிட்டையும் சேர்த்து அளிக்க வேண்டும். மர இலைகளை பால் தரும் மாடுகளுக்கு ஒரு நாளைக்கு 10-15 கிலோ வரை அளிக்கலாம். ஆடுகளுக்கு 3-3.5 கிலோ வரை ஒரு நாளைக்கு கொடுக்கலாம். மேலும் மர இலைகளை கலந்து அளித்தல் அவசியம். அகத்தி, வேம்பு, பூவரசன், கருவேல், குடைவேல், பலா, கொடுக்காபளி, ஆல், அரசன், உதியன், இலந்தை போன்ற மரங்களின் இலைகளையும் கால்நடைகளுக்கு அளிக்கலாம். மர இலைகளை தீவனமாக அளிக்கும்போது கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

* மர இலைகளை பிற புல் மற்றும் உலர்ந்த தீவனத்துடன் சிறிது சிறிதாக அளிக்க வேண்டும்.
* மர இலைகள் 6-8 மணி நேரம் வாட வேண்டும்.
* மர இலைகளை உலரவைத்து அதன் ஈரப்பதம் 15-20% கீழே உள்ள நிலைகளில் அளித்தல் நலம்.
* மர இலைகளின் மீது 2% உப்பு அல்லது வெல்லக் கரைசலை தெளித்தால் உண்ணும் திறன் அதிகமாகும்.
* மர இலைகளை விரும்பி உண்ணாத கால்நடைகளை விரும்பி உண்ணும் கால்நடைகளின்

அருகில் கட்டி வைத்து மர இலைகளை தீவனமாக அளிக்கலாம்.-டாக்டர் வி.ராஜேந்திரன்,உதவி இயக்குனர், கால்நடை பராமரிப்புத் துறை, கொடைக்கானல்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : மே 23,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

**இக்னிமானிடே குளவிகள்**: இந்த இனம் உலகத்திலேயே பெரிய குளவி இனம். இதிலே 60,000 வகைகள் உள்ளன. இந்த வகை குளவிகள், வண்டுகள், வண்ணத்துப்பூச்சிகள், தத்துப்பூச்சிகளின் புழுக்களை தாக்கி அழிக்கும். குறிப்பாக எலிபோரா வகை குளவிகள் தென்னை கருந்தலைப்புழுவை கட்டுப்படுத்த மரத்திற்கு 10 ஒட்டுண்ணிகள் தேவை. 10 நாள் இடைவெளியில் 2-3 முறை ஒட்டுண்ணிகளை விட்டு தென்னை கருந்தலைப்புழுவை அழிக்கலாம். கூடங்களில் பூச்சியியலாளர்கள் நெல் அந்துப் பூச்சியின் புழுக்களின் மூலம் வளர்க்கின்றனர். ஐசோடிமா ஜவானிசிஸ் வகை குளவிகள் கரும்பு, நுனிக்குருத்துப்பூச்சியைத் தாக்கும் இயல்பு கொண்டது. புழுக்கள் கூட்டுப்புழுக்கள் ஆவதற்கு முன் இவை தாக்கும். கரும்பு நுனிக்குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த கரும்பில் ஒரு எக்டருக்கு நூறு ஜோடி புழுக்களை விடலாம். இக்னிமானிடே குடும்ப குளவி இனங்களைப் போல நன்மை செய்யும் பூச்சிகளைக் கண்டறிந்து உழவர்கள் அவற்றை பாதுகாத்து பயனடைய வேண்டும். (தகவல்: முனைவர் தி.மனோகரன், பேராசிரியர்(பூச்சியியல்) விரிவாக்கக் கல்வி இயக்ககம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. 98420 40335.

**ஹியூமிக் அமிலம்**: பூஞ்சாணம், நிலத்தடி நீர், புதைபொருட்களின் சிதைவுகளின் மூலம் உருவாகும் பல அமிலங்கள் சேர்ந்த கலவை. இந்த அமிலத்தை களிமண்ணில் தெளிக்கும்போது அது மண்ணை இலகுவாக மாற்றி அதன்மூலம் நீர் உட்கிரகிக்கும் திறனையும் ஆரோக்கியமான வேர் வளர்ச்சிக்கும் உதவுகிறது. மணற்பாங்கான இடத்தில் தெளிக்கும்போது அதனுடன் தேவையான அங்ககப் பொருட்களைச் சேர்த்து நீர் தேக்கும் திறனை அதிகரிக்கிறது. இதன்மூலம் மண்ணிலிருந்து சத்துக்கள் வெளியேறுவது தடுக்கப்படுகிறது.
மண்ணில் தாவரத்திற்கு தேவையான சத்துக்களைதாவரம் உட்கொள்ளும் வகையில் எளிமையாக மாற்றுவதன் மூலம் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. நன்மை செய்யும் நுண்ணுயிர்களுக்கு ஹியூமிக் அமிலம் உணவாகிறது. நுண்ணுயிர்கள் மண்ணில் உள்ள சத்துக்களைக் கரைத்து பயிர்கள் உட்கிரகிக்க ஏதுவாக செயல்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 1 முதல் 2 லிட்டர் அமிலத்தை 40லிட்டர் நீரில் கரைத்து தெளிப்பான் மூலம் மண்ணில் தெளிக்கலாம்.

பயிர்கள் மேல் தெளித்தல்: ஒரு ஏக்கருக்கு 1 முதல் 2 லிட்டர் ஹியூமிக் அமிலத்தை 20-40 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பான் கொண்டு பயிர்களின் மேல் தெளிக்க வேண்டும். ஹியூமிக் அமிலத்தின் முக்கிய பயனே ரசாயன உரத்தின் பாதிப்பை குறைப்பதே ஆகும். ஹியூமிக் அமிலம் சந்தையில் உள்ள அனைத்து அங்கக உரக்கடைகளிலும் கிடைக்கிறது. 30 லிட்டர் சுமார் 16-20 ரூபாய் என்ற அளவில் 25 லிட்டர் கேனாகக் கிடைக்கிறது. (தகவல்: முனைவர் மு.பவித்ரா, முனைவர் எஸ்.சுந்தரவரதன், முனைவர் எஸ்.பார்த்தசாரதி, பண்டித ஜவகர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காரைக்கால்.
போன்: 04368-261 372)

**சுக்கு**: இஞ்சியின் உலர்ந்த வடிவம்தான் இது. சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகளில் வெகுவாக பயன்படுகிறது. சித்த மருத்துவத்தில் மிளகு, திப்பிலி, சுக்கு இம்மூன்றும் கலந்த திரிகடுகு என்ற கூட்டுமருந்து மிகவும் புகழ்பெற்றதாகும்.
5 கிராம் வீதம் சுக்கு, சீரகம், திப்பிலி, மிளகு ஆகியவற்றை எடுத்து பொடியாக்கி தேன்கலந்து காலை, மாலை சாப்பிட்டால் செரியாமை தீரும். சுக்கு, திப்பிலி, வால்மிளகு, ஏலம் இவைகளை வகைக்கு 5 கிராம் வீதம் எடுத்து பொடியாக்கி, தேன் கலந்து சாப்பிட குரல் இனிமை பெறும். தாய்ப்பாலில் சுக்கை உரசி குழந்தைகளின் வயிற்றில் தடவ வயிற்று உப்புசம் குணமாகும். உடலில் வீக்கம், வலி போன்றவை இருந்தால் சுக்கை உரசி தடவி சூடுகாட்ட தொந்தரவு நீங்கும்.
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## கூட்டுமீன் வளர்த்து வளம்பெறலாம்

பதிவு செய்த நாள் : மே 23,2012,00:00 IST

நன்னீர் கெண்டை மீன் வகைகள் பலவற்றை ஒரே குளத்தில் கலந்து வளர்க்கும் முறை கலப்பின வளர்ப்பாகும். இந்த மீன்கள் ஒரு குறிப்பிட்ட அளவு வளர 8-10 மாதங்கள் வரை நீர் தேவைப்படும். பொதுவாக மீன் வளர்ப்பு குளத்தின் அளவு ஒரு எக்டர் (இரண்டரை ஏக்கர் அல்லது 10,000 ச.மீ.) ஆக இருத்தல் நல்லது. இதை ஐந்து குளங்களாக ஒவ்வொன்றும் அரை ஏக்கர் என்ற அளவில் அமைத்துக் கொள்ள வேண்டும். குளத்தின் வடிவம் செவ்வகமாக இருப்பின் கையாள எளிது.
**நீரின் தன்மைகள்**: ஆழம்-1மீட்டர், வெப்பம்-25-32 டிகிரிசெ, உப்புத் தன்மை-0-2.5 மி.கி. சோடியம் குளோரைடு/லி, கடினத்தன்மை-20-300 மி.கி. கால்சியம், மக்னீசியம்/லி, கார அமிலத்தன்மை-6.5-9.0, நுண்ணுயிர் இருப்பளவு ஆழம்-30-60 செ.மீ., உயிர் வளி - 5 மி.கி/லி
**உரமிடுதல் (ஒரு எக்டர்/ஒரு வருடம்)**: மாட்டு சாணம்-10,000 கிலோ, யூரியா-200 கிலோ, சூப்பர் பாஸ்பேட்-250 கிலோ, பொட்டாஷ்-40 கிலோ. இவைஅனைத்தையும் 10 பங்குகளாக பிரித்து

வைக்கவும். இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு பங்கை இடவும். இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் மாற்றி மாற்றி இடவும்.

முதல் பங்கு உரமிட்டு 15 நாட்களுக்குப் பின் பசுமையாக மாறியதும் விரல் அளவு மீன் குஞ்சுகளை இருப்பு செய்ய வேண்டும்.

**இருப்பு செய்தல்**: கட்லா-25%, ரோகு-15%, மிர்கால்-20%, வெள்ளிக் கெண்டை-10%, புல்கெண்டை-10%, சாதாக்கெண்டை-20%, அதிகபட்ச இருப்பு எண்ணிக்கை - 10,000/எக்டர், அதிகாலையில்/மாலையில் மீன்களை இணங்கவைத்து இருப்பு செய்யவும்.

தகுந்த உணவு பொருட்கள்: அரிசித்தவிடு, கோதுமை தவிடு, கடலை புண்ணாக்கு, எள்ளு புண்ணாக்கு, சோயா மொச்சை, குச்சிகிழங்கு திப்பி, பட்டுப்பூச்சி கூட்டுபுழு.

**உணவிடுதல்**: தவிடு மற்றும் புண்ணாக்கினை 1:1 என்ற விகிதத்தில் கலந்து தினமும் உடல் எடையில் 5 சதவீதம் இடவேண்டும். நன்றாக நீரில் ஊறவைத்து உருண்டைகளாக பிரிக்கவும். சில உருண்டைகளை வளைத்தட்டில் வைத்து குளக்கரையில் வைக்கவும். மீதம் உள்ள உணவு உருண்டைகளை உடைத்து பரவலாக இடவேண்டும்.

**மீன் அறுவடை**: பயிர் காலம் 10 மாதம், வளர்ச்சி-1 கிலோ முதல் 1.25 கிலோ/மீன். ஒரு எக்டரில் சராசரியாக 5-7 டன் அறுவடை செய்யலாம். மீன் வளர வளர 6வது மாதத்தில் இருந்து அறுவடை செய்யலாம்.

**மீன் குஞ்சுகள் வாங்க தொடர்பு கொள்ளவும்**: 1. மேலாளர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், பவானி சாகர் அணை, பவானிசாகர், ஈரோடு.

2. மேலாளர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், ஆழியார் நகர், கோவை மாவட்டம்.

3. மீன்துறை உதவி இயக்குனர், மேட்டூர் அணை, மேட்டூர், சேலம். 04298-244 045.

மேலும் விபரங்களுக்கு: விரிவாக்கக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை-600 051. 044-2555 4375/2555 6750. **மின்னஞ்சல்**: deetanuvas@gmail.com, dee@tanuvas.org.in.**இணையதளம்**: www.tanuvas.ac.in.-எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர்.

தினகரன்

## அதிக பால் உற்பத்திக்கு தீவன அபிவிருத்தி திட்டம்

பதிவு செய்த நேரம்:2012-05-22 16:00:02

விழுப்புரம்: விழுப்புரம் ஆட்சியர் சம்பத் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:
கால்நடைகளின் பராமரிப்பு செலவினை குறைப்பதில் பசுந்தீவனம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர், ஓட்டுப்புல், தானிய வகை தீவனப்பயிர்களான சோளம், மக்காச் சோளம் போன்றவைகளுடன் அதிகப் புரதச்சத்து நிறைந்த வேலி மசால், முயல் மசால் மற்றும் தீவன வகையான தட்டைப் பயறு போன்ற பயிர்களை இறைவையிலும், மானாவாரி யிலும் பயிர் செய்து கறவை மாடுகளுக்கு கலந்து வழங்குவது மூலம் அடர் தீவனத்தின் தேவை குறைந்து பால் உற்பத்திக்கான செலவினம் குறைந்து கூடுதல் லாபம் கிடைக்கும். தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டில் தீவன அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்த ஆணை வழங்கப்பட் டது. அதன் அடிப்படை யில் விழுப்புரம் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் 500 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 0.25 ஏக்கர் நிலம் உள்ள 1489 விவசாயிகளுக்கு புற்கரணைகள், வேலி மசால் விதைகள் விநியோகிக்கப்பட்டது. மேலும் 55 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்துடன் 75 சதவீத மானியத்தில் 65 இதர விவசாயிகளுக்கு மழைநீர் தெளிப்பான் கருவி விநி யோகம் செய்யப்பட்டுள் ளது. தற்போது 2012-13ம் ஆண்டில் மானா வாரி சாகுபடி விழுப்புரம் மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கரில் மக்காச் சோளம் மற்றும் தட்டைப்பயறு தீவனப்பயிராக சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது.

## ரூ4,48 லட்சத்துக்கு வேளாண் விளைபொருள் விற்பனை

பதிவு செய்த நேரம்:2012-05-22 13:07:03

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
பெரம்பலூர் மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் விவசாயிகள் உற்பத்தி செய்யப்படும் பருத்தி மற்றும் மக்காச்சோளம்

ஆகிய விளைப்பொருட்கள் வரப்பெற்று விற்று தரப்படுகிறது. அந்த வகையில் 18ம் தேதி 410 மூட்டை பருத்திகள் வரப்பெற்று ரூ.4,48,000 மதிப்பிலான பருத்தி விற்று தரப்பட்டது. பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு அதிகப்பட்சமாக ரூ.3,945க்கு விற்பனையானது. வாரந்தோறும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வெள்ளிக்கிழமையில் நடைபெறும் விற்பனையில் பருத்தி, மக்காச்சோளம் ஆகிய விளைப்பொருட்களை விற்று விவசாயிகள் பயனடையலாம்.

---